| | | | | |
|---|---|---|---|---|
| யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.<br>**J/ Hartley College, Point Pedro.** | | | | |
| விடுமுறைக்கால செயலட்டை – 2 –2020–தரம் 11<br>**Holiday Worksheet - 2 – 2020 –Grade 11** | | | | |
| தமிழ் மொழியும் இலக்கியமும் | 22 | T | III | இரண்டு மணித்தியாலங்கள்<br>2 hours |
| சுட்டெண்<br>**Index No** | | | | தமிழ் மொழியும் இலக்கியமும் |

## பகுதி – III

01. சுருக்கமான விடை தருக.
    அ. வெற்றிவேற்கையின் மறுபெயர் யாது?
    ஆ. இனியவை நாற்பது என்ற பெயர் வரக்காரணம் என்ன?

02. அ. இலங்கை சட்டசபையில் இலங்கைப்பிரதிநிதித்துவத்திற்கு போட்டி போட்டவர்கள் யாவர்?
    ஆ. நன்னூலாம் கடல் எவ்வகை அணி?

03. அ. ‘பிகு’ என்பதன் அர்த்தம் என்ன?
    ஆ. தலபுராணம் எழுதியவர் என்பதனூடாக வெளிப்படுத்துவது யாது?

04. அ. திருகணி என்றால் என்ன?
    ஆ. தும்பு என்பதன் பொருள் யாது?

05. அ. குகப்படலம் எந்தக் காண்டத்தில் அமைந்துள்ளது?
    ஆ. காட்சிப்படிமங்களால் சிறுவனின் மரணத்தை வெளிப்படுத்திய படம் எது?

06. அ. பேதையர் செயலின் விளைவு யாது?
    ஆ. உயிருடன் சென்ற ஒரு மகள் யார்?

07. அ. அரிச்சந்திர புராணம் யாரால் எழுதப்பட்டது?
    ஆ. நரகம் புகினும் எள்ளேன் என்று பாடியவர் யார்?

08. அ. வாழைச்சேனைக்காகிதத் தொழிற்சாலை ஒலி “மூத்தம்மா” கதையில் எச்சந்தர்ப்பத்தில் இடம்பெறுகின்றது?
    ஆ. மூத்தம்மா தலைக்கு வைக்கும் எண்ணெயின் உள்ளீடுகள் எவை?

09. அ. “போடியார்” எனப்படுபவர் யாா?
    ஆ. மூத்தம்மா சிறுகதையில் இடம்பெறும் குல தெய்வத்தின் பெயர் யாது?

10 அ. “தேயிலைத்தோட்டத்திலே” கவிதையை மொழி பெயர்த்தவர் யார்?
    ஆ. மூடுகின்ற இமைக்கடங்கா முழுநிலவு விழிகள் என்பதில் “இமைக்கடங்கா” என்பது எவ்வகை அணியாகும்.

(20 புள்ளிகள்)

02. பின்வரும் பாடல்களையும் உரைப்பகுதியினையும் படித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.
    அ. தண்டாமரையின் உடன்பிறந்தும் தண்டேன்
            நுகரா மண்டுகம்
        வண்டோ கானத்திடையிருந்து வந்து
            கமலமது உண்ணும்
        பண்டே பழகியிருந்தாலும் அறியார்
            புல்லர் நல்லோரைக்
        கண்டே களித்தங்கு உறவாடித்தம்மிற்
            கலப்பர் கற்றாரே.

i. கற்றோரின் இயல்பாக கூறப்படுவதனை விளக்குக?
ii. தண்டேன், கமலமது என்பன எவ்வகைத் தொகை என இனங்காண்க.

ஆ. ஓர் தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பர்
ஆர் தட்டினும் தட்டுவாராமலே அன்னதானத்துக்கு
மார் தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே.

i. பஞ்சகாலத்தின் கொடுமை எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
ii. சீதக்காதியின் கொடையின் உச்சமாகக் கூறப்படும் வரலாற்றுநிகழ்வினைத் தருக.

இ. சுடுமயானத்திடை தன்றுணை யேகத்
தோன்றல் துயர்க் கடலினேகக்
கடுமையார் கானகத்து கருணையார்
கலியேகக் கழற்கான் மாயன்
நெடுமையால் அன்றுஅளந்த உலகெலாம்
தன்மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை யாரிவரென்
றுரையென்னக் குரிசில் கூறும்

i. கைகேயி – மாயன் இருவரது செயலுக்குமான ஒப்புவமையினை விளக்குக.
ii. இராமன் குறித்து கூறப்பட்ட சிறப்பினை விளக்குக.

ஈ. இரண்டாவது அம்சம் ஒலி, இது காட்சிப் படிமங்களுக்கு தாங்கலாக வருவது சினிமாவில் ஒலி பலவிதப்படும். பேசும் வார்த்தைகள், இயல்பான ஒலி, கடைசியாக இசை எங்கே ஒலி முக்கியத்துவம் பெற்று காட்சிப் படிமங்கள் இரண்டாவது கட்டத்துக்கு தள்ளப்படுகின்றனவோ அங்கே சினிமா சீரழிந்து தாழ்ந்து போகின்றது.
i. சினிமாக்களில் பயன்படும் மூவகை ஒலிகளும் எவை?
ii. ஒலிக்கும் காட்சிப்படிமத்திற்குமான இணைப்பினை உதாரணத்தோடு தருக.

உ. உருக்கி எடுத்த இரும்பினால் செய்த 'ரெமிங்டன்' தட்டெழுத்து பொறியில் நான் ஆரம்பகாலத் தீட்சை பெற்றவன்
i. "ஆரம்பகாலத்தீட்சை பெற்றவன்" என்பதன் பொருளை விளக்குக.
ii. தட்டெழுத்தானது "கிறிஸ்ரோபர் சோல்" (Chirtopher sholes) என்ற பத்திரிகை யாரால் கண்டறியப்பட்டது. எனினும் 'ரெமிங்டன்' என அழைக்கபடுவதற்கான காரணத்தை தருக.

❖ **03, 04 வினாக்ளுக்கு கட்டாயம் விடை தருக.05, 06, 07 என்பவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு விடை தருக.**

03. அ. புதுமையின் வரவால் தமிழினம் தளம்புகின்ற நிலையை கம்பியூட்டர் விளக்கும் வகையினைத் தருக?
ஆ. புதிய உவமைத் தொடர்களையும் அவை இடம் பெறும் சந்தர்ப்பங்களையும் பொருத்தப்பாட்டினையும் கம்பியூட்டர் கதையிலிருந்து விளக்குக.
(15 புள்ளிகள்)

04. அ. "மூத்தம்மா" என்ற கதாபாத்திரத்தின் பண்புகளை விளக்குக?
ஆ. கிராமிய மண்வாசனைப்பண்பு மூத்தம்மா சிறுகதையிலே வெளிப்படும் வகையினை விளக்குக.
(15 புள்ளிகள்)

05. திருக்குற்றாலக்குறவஞ்சியில் இயற்கை வர்ணனை வெளிப்படும் வகையினை விளக்குக.

06. அ. நாடகத்திற்கும் சினிமாவிற்குமான வேறுபாடுகள் எட்டு தருக?
ஆ. நாடகத்திற்கும் சினிமாவிற்குமான ஒற்றுமைப்பண்புகள் எட்டு தருக?

07. இலட்சியத்திலே சமநோக்கு சாத்தியமானதா? என "இலட்சியமும் சமநோக்கும்" கட்டுரையை ஆதாரமாக கொண்டு விளக்குக.
(10 புள்ளிகள்)